# முதலுதவி

## கடலிற்கு அடியில் சுழியோடுபவர்களிற்கு ஏற்படும் “Bends” (பெண்ட்ஸ்) இற்கான முதலுதவி

## இலங்கை மருத்துவ சங்கம், இலங்கை கடற்படையின் சுகாதார செயலகத்துடன் இணைந்து தயாரித்த வெளியீடு

Bends இனால் பாதிக்கப்பட்ட ஒரு சுழியோடியை பராமரிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கும் SCUBA சுழியோடிகள், படகோட்டிகள், மற்றும் உயிர் காப்போரின் தேவைக்காக இந்த பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சுழியோடுதலினால் ஏற்படும் Bends போன்ற நிலைமைகளிற்கு உடனடி முதலுதவி வழங்கப்பட வேண்டியதால், பாதிக்கப்பட்ட சுழியோடியின் படகில் இருக்கும் ஏனையோர், இந்த முதலுதவி சிபாரிசுகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது மிக அவசியமாகும். உயர் அமுக்கத்தில் Recompression (றிகொமிபிரஸ்ஸன்) Chamber (கூடத்தில்) இல் ஒட்சிசன் வழங்கப்படுவதே Bends இற்குரிய ஒரேயொரு சிகிச்சை முறையாகும். இந்த சிகிச்சை முறை திருகோணமலையிலுள்ள கடற்படையினரின் வைத்தியசாலையில் மட்டுமே இருக்கிறது.

எனவே இந்த நோயாளிகளை உடனடியாக இந்த வைத்தியசாலைக்கு எடுத்து செல்ல முடியாவிடின், அவரை அண்மையிலுள்ள ஒரு வைத்தியசாலையில் அனுமதித்தல் அவசியம். இதன் மூலம் ஆரம்ப சிகிச்சைகளின் பின்னர், திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டிய ஆயத்தங்களை செய்து கொள்ளலாம்.

# Bends இனால் பாதிக்கப்பட்டுள்ள சுழியோடிகளிற்கான முதலுதவி சிகிச்சை

1. தட்டையாக படுக்கவிடவும்.
2. நினைவு இழந்து இருப்பாராயின் இடது பக்கம் சரித்து வைக்கவும்.
3. ஆறுதல்படுத்தி, அமைதியாகவும் அசையாமல் இருக்கவும் தென்புபடுத்தவும்.
4. குளிரில் இருந்து பாதுகாக்கவும், ஈர ஆடைகளை அகற்றவும்.
5. சுய நினைவுடன் இருப்பின் மதுபானம் அல்லாத நீராகாரங்களை அதிகளவில் அருந்தக் கொடுக்கவும்.
6. பாதிக்கப்பட்டவரை படகில் இருந்து தூக்கி கொண்டு வந்து கரையில் தட்டையாகப் படுக்க விடவும்.
7. தரைக்கு கொண்டு வந்தவுடன் உடனடியாக ஒட்சிசன் வழங்கவும். ஒட்சிசன் வழங்கும் முக மூடியை இறுக்கமாகப் பொருத்தி அதனூடாக 100% ஒட்சிசனை 20 நிமிடங்கள் கொடுத்து பின்னர் 5 நிமிடங்கள் ஒன்சிசன் இல்லாமல் காற்றை சுவாசிக்க விடவும். இவ்வாறாக 20 நிமிடங்கள் ஒட்சிசன், 5 நிமிடம் காற்று என தொடர்ந்து வழங்கவும்.
8. இயலுமானவரைக்கும் துரிதமாக திருகோணமலை கடற்படை வைத்தியசாலைக்கு நோயாளியை அனுமதிப்பது அவசியம். 0262 261868 அல்லது 0262 266100 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேற்குறிப்பிட்ட உயர் அமுக்கத்தில் Recompression கூடத்தில் வழங்கப்படும் ஒட்சிசன் சிகிச்சைக்கு ஆயத்தங்களை செய்யவும். தாமதமாகுமெனில், அண்மையிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கவும்.
9. வைத்தியரிடம் அல்லது மற்றைய வைத்தியசாலை ஊழியர்களிடம், நோயாளியின் அறிகுறிகள் கடலிற்கு அடியில் அதிக ஆழத்தில் அதிக நேரம் சுழியோடியதால் ஏற்பட்டது எனக் குறிப்பிடவும்.

**நீரின் அடியில் இருக்கும் போது ஒட்சிசனை வழங்க வேண்டாம்**

உயர் அமுக்க ஒட்சிசன் Recompression Chamber இல் வழங்கப்படும்வரைக்கும் திருகோணமலை கடற்படை வைத்தியசாலையிலோ அல்லது அண்மை வைத்தியசாலையிலோ பின்வரும் சிகிச்சை முறைகள் வழங்கப்படலாம். சிறுநீர் கழிக்கமுடியாவிடின் அதற்கான குழாய் (catheter) போடப்படும். நாளம் மூலமாக சேலைன் (Saline) மருந்து ஏற்றப்படும். முன்னர் குறிப்பிட்டபடி இறுக்கமாகப் பொருத்தப்பட்ட சுவாசத்திற்கான முகமூடி மூலம் 20 நிமிடம் ஒட்சிசன், 5 நிமிட இடைவெளி விட்டு வழங்கப்படும்.

நோயாளியின் சுழியோடியது சம்பந்தமான விபரங்களை (சுழியோடும் போது பயன்படுத்தப்பட்ட ஒட்சிசன் சிலிண்டர்களின் எண்ணிக்கை, கடலின் அடியில் இருந்த நேரத்தின் அளவு, என்ன நேர இடைவெளியல் கடலின் மேற்பரப்புக்கு வந்தமை, மேற்பரப்புக்கு வந்த பின்னர் எத்தனை நேரத்தின் பின்னர் Bends இன் அறிகுறிகள் ஏற்பட்டன, நோயாளிக்கு அளிக்கப்பட்ட முதலுதவியின் விபரங்கள்) விளக்கமாக வழங்க கூடிய ஒருவர் நோயாளியுடன் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும். மிக முக்கியமாக திருகோணமலை கடற்படை வைத்தியசாலைக்கும் செல்லும் போது.

## Bends இன் போது அதிகளவில் காணப்படும் அறிகுறிகள்

(டி கொமிபிரஸ்ஸன் சிக்னஸ் Decompression Sickness or DCS)

*மூட்டுவலி *முதுகு வலி *விறைப்பு *உணர்வுகளில் மாற்றம் *களைப்பு, சோர்வு *கால் கைகளில் சுள்ளிடுவது அல்லது சுண்டி இழுப்பது போன்ற ஒரு உணர்வு *வாந்தி வரும் உணர்வு *நிற்க முடியாமல் தடுமாறுதல் *தோலில் rash *பார்வைக் கோளாறு *அதிக களைப்பு *சிறுநீர் கழிக்க முடியாமல் போதல்

**BENDS உதவி தொலைபேசி இலக்கங்கள்**



அறிவுரை தேலையா? சுந்தேகங்களிற்கு பதில் தேவையா?

பின்வரும் தொலைபேசி இலக்கங்களை எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| Dr. E. W. ஜயசிங்க | - | 0777849284 |
| Dr. மலிக் பெர்ணான்டோ | - | 0777678606 |
| திரு. டானியல் ஃபிரயர் | - | 0777482683 |


தயாரிப்பு

**மலிக் பெர்ணான்டோ**

**இலங்கை மருத்துவ சங்கம் மற்றும்**

**இலங்கை கடற்படை சுகாதார**

**செயலகத்தின் சார்பிலும்**

கார்த்திகை 2013; 5/2018

வெளியிட்டோர்

**இலங்கை மருத்துவ சங்கம்**

விஜேராம ஹவுஸ்

6, விஜேராம மாவத்தை

கொழும்பு 07.